## மொழிப்போரின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளி விளக்குகளாய் நின்று உயிர்நீத்த

# தாளமுத்து - நடராசனுக்கு திருவுருவச் சிலைகள்!

## நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செய்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜன. 27 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.1.2025) தமிழ் மொழி தியாகிகள் நினைவு நாளையொட்டி, சென்னை, மூலக்கொத்தளத்தில் அமைந் துள்ள மொழிப் போரின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் நின்று உயிர்துறந்த தாளமுத்து - நடராசன் ஆகியோரின் நினைவிடம் 34 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு திறந்து வைத்தார்.**

**அதனையடுத்து “சென்னை, எழும்பூரில் உள்ள தாளமுத்து - நடராசன் மாளிகை வளாகத்தில் திருவுருவச் சிலை நிறுவப்படும்” என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.**

தமிழ் மொழி, நீராலும் நெருப்பாலும், வஞ்சகர்களின் வெறுப்பாலும் வெல்லமுடியாத வீழ்த்த முடியாத செம்மாந்த மொழியாகும்! தத்தமது உரைநடையின் வாயிலாகவும், கவிதைத் தீரமுடனும் தமிழறிஞர்கள் பலர் தங்கள் விழியெனப் போற்றி வளர்த்த வண்டமிழ் மொழியாகும்.

1938ஆம் ஆண்டு மதராஸ் மாகாணத்தின் அப்போதைய முதலமைச்சரான மூதறிஞர் இராஜாஜி அவர்கள், தமிழ்நாட்டு மாணவர்கள் இனி இந்தி கட்டாயமாக கற்க வேண்டுமென்று வெளியிட்ட அறிவிப்பினை எதிர்த்து, 27.02.1938 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு மாநாட்டில், தாய்மொழியை காக்க இந்தி திணிப்பினை எதிர்க்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு அதனடிப்படையில், தந்தை பெரியார், மறைமலை அடிகள், திரு.வி.க., நாவலர் சோமசுந்தர பாரதி, பேரறிஞர் அண்ணா போன்ற தமிழறிஞர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் தாய்மொழி காக்க களம் கண்டனர்.

அப்போது, 14 வயதே ஆன பள்ளி மாணவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திருவாரூர் வீதியில் தன்னுடன் பயிலும் மாணவர்களை அணி திரட்டி, “கயல், வில், புலி” சின்னம் பொறித்த தமிழ்க் கொடியினை கையிலேந்தி,

**“ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்!**
**நீ தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே!”**

என்று, இந்தித் திணிப்பு எதிர்ப்பு போர்ப்பரணி பாடி, தமிழ்மொழி காக்கும் போர் வீரராய் முன்வந்தார்.



நடராசன் தாளமுத்து

அன்னைத் தமிழ் காக்க, முதற்கட்ட இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு, சிறை சென்ற நடராசன் 15.1.1939 அன்றும்: தாளமுத்து 11.3.1939 அன்றும் வீர மரணம் அடைந்தனர். தமிழக மக்களின் தொடர் போராட்டத்தினால், அரசு 21.02.1940ல் கட்டாய இந்தித் திணிப்பை கைவிடும் முடிவுக்கு வந்தது.

தாராளமாகவும் ஏராளமாகவும் தமிழ்ச் சொற்கள் இருந்தும், பிறமொழிச் சொல் கலந்து பேசியும், எழுதியும் தமிழுக்கு ஊறு விளைத்திட முனைந்தோரால், முடிந்தளவு முயன்றும், யாதொன்றும் புரிந்திட இயலாது, என்று முடங்கிடும் நிலையில் என்றென்றும் மாறாத இனிமைத் தமிழுக்கு ஆபத்து வரத்துணிந்த போது,

**“செந்தமிழுக்கு தீங்கொன்று வந்துற்ற பின்னும் இத்தேகம் இருந்தென்ன லாபம்?”**

என, தனக்குத் தானே கேள்வி எழுப்பிக் கொண்ட அன்னைத் தமிழின் அருந்தவப் புதல்வர்களாம் கீழ்ப் பழுவூர் சின்னச்சாமி, விருகம்பாக்கம் அரங்கநாதன். கோடம்பாக்கம் சிவலிங்கம், மாயவரம் சாரங்கபாணி. விராலிமலை சண்முகம், கீரனூர் முத்து, பீளமேடு தண்டபாணி, சத்தியமங்கலம் முத்து, அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன் தீக்குளித்தும், துப்பாக்கி யால் சுட்டுக் கொல்லப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் ராஜேந்திரன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோரின் தீரத்தை நினைவு கூர்ந்திடும் நாள் தான் ஜனவரி 25ஆம் நாள் ஆகும்.

இந்தியைத் திணிக்க முயன் றோருக்கும், முயல்வோருக்கும் அச்சத்தை உருவாக்கிவிட்டுச் சென்றுள்ள தோழர்கள் நடராசன் தாளமுத்து ஆகிய இருவரின் தியாகத்தைப் போற்றும் வண்ணம் சென்னை, மூலக்கொத்தளத்தில் தந்தை பெரியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட நினைவிடம் தற்போது சிறப்பான முறையில் புதுப்பிக்கப்பட்டு, தமிழ்மொழித் தியாகிகள் நினைவு நாளான நேற்றையதினம் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.1.2025) தமிழ்மொழித் தியாகிகள் நினைவு நாளையொட்டி, சென்னை, மூலக்கொத்தளத்தில் அமைந்துள்ள மொழிப்போர்த் தியாகி, சமூகப் போராளி டாக்டர் எஸ்.தருமாம்பாள் அம்மையார் அவர்களது நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள், டாக்டர் எஸ்.தருமாம்பாள் அவர்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் மொழிப் போரின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் நின்று உயிர்துறந்த தாளமுத்து - நடராசன் மற்றும் மொழிப்போர்த் தியாகி, சமூகப் போராளி டாக்டர். எஸ்.தருமாம்பாள் அம்மையார் ஆகியோரது திருவுரு வப் படங்களுக்கு மலர் தூவியும், அவர்களின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தும் மரியாதை செலுத்தினார்.

**மொழிப்போரின் வெற்றி வெளிச்சத்திற்கு ஒளிவிளக்குகளாய் நின்று உயிர்நீத்த தாளமுத்து - நடராசன் ஆகிய இருவருக்கும் சென்னை, எழும்பூரில் உள்ள தாளமுத்து நடராசன் மாளிகை வளாகத்தில் திருவுருவச் சிலை நிறுவப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.**

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஐட்ரீம் ஆர்.மூர்த்தி, சி.வி.எம்.பி.எழிலரசன், எஸ்.சுதர்சனம், ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், கே.பி.சங்கர், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# 2026 - சட்டமன்றத் தேர்தல் ; கொள்கைவாதிகள் நமக்கும் - கொத்தடிமைக் கூட்டம் அ.தி.மு.க.விற்கும் இடையே என்பதை மறந்து விடாதீர்கள் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை.... முதல் பக்கத் தொடர்ச்சி

- விருகம்பாக்கம் அரங்கநாதன்
- கீரனூர் முத்து
- அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன்
- சத்தியமங்கலம் முத்து
- மயிலாடுதுறை சாரங்கபாணி
- சிவகங்கை மாணவர் இராசேந்திரன்
- விராலிமலை சண்முகம்
- பீளமேடு தண்டபாணி

- என்று ஏராளமான வீரர்கள் இந்தப் போர்க்களத்தில் தங்களின் இன்னுயிரைக் கொடுத்தார்கள்.

தமிழ்த்தாயின் தலைப் பிள்ளைகள்!

தியாகத்தின் திருவுருவங்கள்!

இந்தத் தியாகிகள்தான் தமிழ்த்தாயின் தலைப் பிள்ளைகள்!

தியாகத்தின் திருவுருவங்கள்!

இந்தி எதிர்ப்புப் போர் குறித்து தலைவர் கலைஞர் சொன்னது. “இது இன உரிமைப் போர்! ஏகாதிபத்திய எதிர்ப்புப் போர்!” என்று முழங்கினார்! அதாவது, நாம் நடத்தும் இந்திக்கு எதிரான போர் என்பது, ஏதோ ஒரு மொழிக்கு எதிரான போர் அல்ல; நம்முடைய பண்பாட்டைக் காக்கும் போர்!

இப்படி மொழியைக் காக்கப் போராடிய நம்முடைய கழக ஆட்சி 1967இல் அமைந்த பிறகுதான், தமிழ்நாட்டை இருமொழிக் கொள்கை கொண்ட மாநிலமாகப் பாதுகாத்தோம்! அதற்கு சிக்கலை உருவாக்கத்தான், மும்மொழித் திட்டத்தைக் கொண்டு வரப் பார்க்கிறார்கள். தேசிய கல்விக் கொள்கையைக் கொண்டு வருவதே இந்தியையும், சமஸ்கிருதத்தையும் நமது மீது திணிக்க வேண்டும் என்றுதான்! இவ்வாறு, நாம் எத்தனையோ மொழித் திணிப்புகளையும், பண்பாட்டுத் திணிப்புகளையும் கடந்துதான் வந்திருக்கிறோம்!

### ஆய்வுப் பூர்வமாக நிறுவினோம்! வாழும் காலத்தில் உணர்த்தினோம்!

இப்போது கூட, டி.ஆர். பாலு அவர்கள் சொன்னாரே, 5,300 ஆண்டுகளுக்கு முன்னரே இரும்பு;j தொழில்நுட்பம் இருந்த உலகின் தொன்மையான பண்பாடும் நாகரிகமும் தமிழ்நாட்டில் இருந்திருக்கிறது என்று! அதனை நாம் ஆய்வுப்பூர்வமாக நிறுவி இருக்கிறோம். இந்த கண்டுபிடிப்பு, நாம் வாழும் காலத்தில், அதிலும் நான் ஆளும் காலத்தில் நிகழ்ந்திருக்கிறது. பெருமகிழ்ச்சியைக் கொடுக்கிறது! ஆனால், இந்த அறிவியல்பூர்வமான ஆய்வு முடிவுகளைக்கூட சிலரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை... அதற்கான காரணத்தை நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமா என்ன?

இப்படிப்பட்ட தொல்சமூகமான தமிழ்ச்சமூகம் மேல், ஆரிய மொழியை நேரடியாகத் திணிக்க முடியவில்லை என்று பள்ளிகள் மூலமாக பல்கலைக் கழகங்கள் மூலமாகத் திணிக்க நினைக்கிறார்கள்! மாநில அரசு நிதியால், தமிழ்நாட்டு மக்களின் உழைப்பால் உருவாக்கப்பட்ட நம்முடைய பல்கலைக் கழகங்களுக்குத் துணை வேந்தரை மட்டும் ஆளுநர் நியமிப்பாரா?

நான் கேட்க விரும்புவது... உயர்கல்வி நிறுவனங்களை உருவாக்க - நிலம் கொடுத்து - அதை வளர்த்தெடுத்து கட்டடங்கள் கட்டி பேராசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் எங்களுக்கு பல்கலைக்கழகத் துணைவேந்தரை நியமிக்கத் தெரியாதா?

அண்மையில் யு.ஜி.சி. வரைவு நெறிமுறைகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைத் திரும்பப் பெற வேண்டும் என்று நாட்டிலேயே முதன்முறையாக நாம்தான் சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தோம். ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன். அதன் தொடர்ச்சியாகத்தான், “தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியது போன்று உங்கள் மாநில சட்டமன்றத்திலும் தீர்மானம் நிறைவேற்றுங்கள்” என்று இந்தியா கூட்டணி ஆளும் மாநில முதலமைச்சர்களுக்கு கடிதம் எழுதினேன்.

### செய்யக் கூடாததையெல்லாம் செய்வதுதான் ஒன்றிய அரசு!

தமிழ்நாட்டைத் தொடர்ந்து கேரளச் சட்டமன்றத்தில் இப்போது தீர்மானம் நிறைவேற்றி விட்டார்கள். கர்நாடக அரசும் எதிர்த்திருக்கிறது! பல்கலைக்கழகங்களை உருவாக்குவது மாநிலங்கள். அப்போது, பல்கலைக் கழகங்களை நிர்வகிக்கும் வழிநடத்தும் தலைமை வகிக்கும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு வேண்டாமா? அதாவது, எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல் எதைச் செய்யக் கூடாதோ அதையெல்லாம் செய்கிறது ஒன்றிய அரசு.

## 2026 தேர்தலிலும் நாம்தான் வெல்வோம்! ஏழாவது முறையும் ஆட்சி அமைத்து ஏற்றம் காண்போம்!

தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய இயற்கைப் பேரிடர் நிவாரண நிதியைத் தர மறுக்கிறார்கள். பள்ளிக் கல்வித் துறைக்குத் தர வேண்டிய நிதியைத் தர மறுக்கிறார்கள். புதிய சிறப்புத் திட்டங்களை அறிவிக்க மறுக்கிறார்கள். ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாடு என்ற பெயரே இல்லை. இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம். இதையெல்லாம் செய்திருக்க வேண்டும். ஆனால், செய்யவில்லை! ஆனால், எதைச் செய்கிறார்கள் என்றால்? இந்தியைத் திணிப்பார்கள்! சமஸ்கிருதப் பெயர்களை புகுத்துவார்கள்! மாநில உரிமைகளில் தலையிடுவார்கள்! குடியுரிமைத் திருத்தச் சட்டம் கொண்டு வருவார்கள்! நம்முடைய குழந்தைகளைப் பழிவாங்க நீட் நடத்துவார்கள்! புதிய கல்விக் கொள்கையைப் புகுத்துவார்கள்! இதுதான் ஒன்றிய பா.ஜ.க. அரசின் எதேச்சாதிகாரம்!

ஒற்றை மதம்தான் இந்தியாவில் இருக்க வேண்டும் என்று பா.ஜ.க. நினைக்கிறது. ஒற்றை மொழிதான் இருக்க வேண்டும் என்று நினைக்கிறது. இன்றைய தினம் அவர்கள் இந்தியின் ஆதரவாளர்களாகக் காண்பித்துக் கொள்கிறார்கள்.

ஆனால், உண்மை என்ன? நான் எப்போதுமே ஒன்றைச் சொல்வேன். பா.ஜ.க.வைப் பொறுத்தவரைக்கும், எதிலுமே குறுகிய காலச் செயல்திட்டமாக இருக்காது. நீண்டகாலச் செயல் திட்டமாகத்தான் இருக்கும். அவர்கள் சமஸ்கிருத ஆதரவாளர்கள்! நேரடியாக சமஸ்கிருதத்தைச் சொன்னால் கடுமையாக எதிர்ப்பு வரும் என்று முதலில் இந்தியைச் சொல்கிறார்கள். இந்தியை அரியணையில் அமர வைத்த பிறகு சமஸ்கிருதத்தைக் கையில் எடுப்பார்கள். முதலில் இந்தி பின்னர் சமஸ்கிருதம். இதுதான் பா.ஜ.க. கொள்கை!

### பேரறிஞர் அண்ணா அமைத்துத் தந்த அடித்தளம்! அதனைச் செயலாக்கியவர் கலைஞர் அன்றோ!

இன்றைக்கு நாம் அடைந்திருக்கும் வளர்ச்சியை சாதாரணமாக அடையவில்லை. சமூக நீதிக்காக 100 ஆண்டுகள் போராடியிருக்கிறோம்! உழைத்திருக்கிறோம். பேரறிஞர் அண்ணா ஏற்படுத்தித் தந்த அடித்தளத்தில் - நவீனத் தமிழ்நாட்டை தலைவர் கலைஞர் உருவாக்கினார். நம்முடைய திராவிட மாடல் அரசு அனைத்து வகையிலும் தமிழ்நாட்டை மேலும் உயர்த்தி வருகிறது.

- தமிழ்நாடு இந்திய நாட்டின் இரண்டாவது வளர்ந்த பொருளாதார மாநிலமாக இருக்கிறது.

ஐ.நா. அமைப்பின் விருதைப்பெற்ற ‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டம்!

- தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில், 5.4 விழுக்காடாக இருந்த தமிழ்நாட்டின் பங்கு, கடந்த நான்கு ஆண்டுகளில் 9.21 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது.
- பொருளாதாரக் குறியீடுகள் அனைத்திலும் தமிழ்நாடு வளர்ச்சியை எட்டி இருக்கிறது.
- மருத்துவம், கல்வி, சமூகநலன் ஆகியவற்றை மேம்படுத்துவதில் இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக இருக்கிறது.
- இந்தியாவின் வலிமை மிக்க விளையாட்டு மையமாகத் தமிழ்நாடு வளர்ந்துவிட்டது.
- மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் 2024 ஆம் ஆண்டுக்கான ஐ.நா. அமைப்பு விருதைப் பெற்றிருக்கிறது.
- தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் 2.2 விழுக்காடு மக்கள் மட்டுமே ஏழைகளாக இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது தேசியச் சராசரியான 14.96 விழுக்காட்டை விட மிகமிகக் குறைவு. அடுத்த இரண்டு ஆண்டுகளில் வறுமையை முற்றிலுமாக ஒழிக்க ‘முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை’ அரசு தொடங்க இருக்கிறது.
- தமிழ்நாடு அமைதியான மாநிலமாக இருப்பதால், பணிபுரியும் பெண்கள் அதிகமாக இருக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது. இந்திய நாட்டின் மொத்தப் பெண் தொழில் பணியாளர்களில், 41 விழுக்காடு பெண்கள், தமிழ்நாட்டில் தான் இருக்கிறார்கள்.
- கடந்த மூன்று ஆண்டுகளில் 10 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமாகத் தனியார் முதலீட்டுத் திட்டங்கள் வருவது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

- இவ்வாறு, வான் நோக்கி வளர்ந்து வருகிறது தமிழ்நாடு. இந்த வளர்ச்சியை பல்வேறு ஆதிக்க சக்திகள் விரும்பவில்லை! இந்த வளர்ச்சியைத் தடுக்க மாநில சுயாட்சியைச் சிதைக்கிறார்கள்!

## தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றுவது தி.மு.க.! தமிழ்நாட்டை அனைத்து வகைகளிலும் அடமானம் வைத்தது அ.தி.மு.க.!

### ஒன்றிய அரசின் பண்பாட்டுப் படையெடுப்பு! அஞ்சாமல் செயலாற்றும் தி.மு.க. அரசு!

கூட்டாட்சிக்கு வேட்டு வைக்கிறார்கள்! இந்தி மொழியை அனைத்து இடத்திலும் ஆதிக்க மனப்பான்மையுடன் திணிக்கிறார்கள். நிதியைத் தர மறுக்கிறார்கள். மொத்தத்தில் தமிழ்நாட்டின் மீது, அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டுப் படையெடுப்பை ஒன்றிய பா.ஜ.க. அரசு நடத்திக் கொண்டு இருக்கிறது. அதற்கு எதிராக திராவிட முன்னேற்றக் கழகம் எந்த மிரட்டலுக்கும் அஞ்சாமல் போராடிக் கொண்டு இருக்கிறது.

அதனால்தான் சொல்கிறேன்... மொழிப்போர் இன்னும் முடியவில்லை. இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது!

### மொழிப் போராட்டம் முடியவில்லை! தொடங்குகிறது!

எவ்வாறு சொல்கிறேன் என்றால்... ஒன்றிய அரசுப் பணிகளுக்கு இந்தி தெரிய வேண்டும் என்று சொல்வது; ‘பொதிகை’ தொலைக்காட்சி நிலையத்தில் இந்தி மாதம் கொண்டாடுவது அங்கு, தமிழ்த்தாய் வாழ்த்தில் திராவிட நல்திருநாடும் என்ற சொல்லைத் தவிர்த்துவிட்டுப் பாடுவது; நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுப்பும் கடிதங்களுக்கு இந்தியில் பதில் அனுப்புவது; அலுவல் மொழிக்கான நாடாளுமன்றக் குழு அறிக்கையில் ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்.இல் பயிற்று மொழியாக இந்தி இருக்க வேண்டும் என்று பரிந்துரைப்பது என்று மொழிப்போர் இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

மொழிச் சிதைந்தால் இனம் சிதையும்! இனம் சிதைந்தால், நம்முடைய பண்பாடே சிதைந்து விடும்! பண்பாடு சிதைந்தால், நம்முடைய அடையாளம் போய்விடும்! அடையாளம் போனால், தமிழன் என்று சொல்லிக் கொள்ளும் தகுதியையே இழந்துவிடுவோம்! தமிழன் என்ற தகுதியை இழந்தால், நாம் வாழ்ந்தும் பயனில்லை! எனவே, மொழியையும் இனத்தையும் நாட்டையும் காக்க வேண்டும்! இந்த மூன்றையும் காக்கும் கழகத்தைக் காக்க வேண்டும்! கழகம் உருவாக்கிய ஆட்சியைக் காக்க வேண்டும்!

அன்றைக்கு மாணவர்களும் இளைஞர்களும் இணைந்து தமிழைக் காத்தார்கள். இன்றைக்கு அந்த மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் இந்த மேடையில் இருந்து ஒரு முக்கியமான அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய பல்கலைக் கழங்களை மாநில அரசுகளிடம் இருந்து பறிக்கும் ஆபத்தை முறியடிக்க, நம்முடைய மாணவரணி சார்பில் தலைநகர் டெல்லியில் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து, மாபெரும் போராட்டம் நடைபெறும்.!

அன்றைக்கு, மொழிப்போரில் ஈடுபட்டு, இந்தி பேசாத மாநிலங்களின் மொழிகளை எல்லாம் காப்பாற்றினோம். இன்றைக்கு, கல்வி உரிமைப் போரில் ஈடுபட்டு, இந்தியாவில் இருக்கும் அனைத்து மாநிலங்களின் கல்வி உரிமையையும் காக்க கழக மாணவரணியினர் முன்கள வீரர்களாக டெல்லியில் திரளுவார்கள். கல்வி உரிமையையும் மாநில உரிமைகளையும் காப்போம்!

வரும் 2026ஆம் ஆண்டு நடக்க இருக்கும் சட்டமன்றத் தேர்தல், கொள்கை வாதிகளாக இருக்கும் நமக்கும் கொத்தடிமைக் கூட்டமாக இருக்கும் அ.தி.மு.க.விற்கும் நடக்கும் தேர்தல். மறந்துவிடாதீர்கள்!

தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் முன்னேற்றிய தி.மு.க.விற்கும் தமிழ்நாட்டை அனைத்து வகையிலும் அடமானம் வைத்த அ.தி.மு.க.விற்கும் நடக்கும் தேர்தல்.

2019 முதல் நடந்த அனைத்துத் தேர்தலிலும் தொடர்ச்சியாக வென்றிருக்கிறோம்.

### தலைவர் கலைஞருக்குப் புகழ் சேர்க்கும் - நமது தொடர் வெற்றிகள்!

தலைவர் கலைஞர் நம்மை விட்டுப் பிரிந்த பின் நாம் சந்தித்த எல்லாத் தேர்களிலும் வென்று நாம் கலைஞர் அவர்களுக்குப் புகழ் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இது தொடரும்! நான் உறுதியாகச் சொல்கிறேன்.

தொடர்ந்து நான் ஒவ்வொரு மாவட்டமாக, சுற்றுப்பயணம் மேற்கொண்டு அங்கே சந்திக்கும் மக்கள் முகங்களை எல்லாம் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்.

2026 தேர்தலிலும் நாம்தான் வெல்வோம்! ஏழாவது முறையும் ஆட்சி அமைத்து ஏற்றம் காண்போம்!

- மொழிப்போர் மறவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் இந்த நேரத்தில் உறுதியேற்போம்! உறுதியேற்போம்! உறுதியேற்போம்!

இங்ஙனம் மொழிப்போர்ப் தியாகிகள் வீரவணக்க நாள் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.